பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.30.07.2019

**நிகழும் திருவள்ளுவராண்டு ஜுலை மாதம் 31 ம் நாள் (31.07.2019) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள்கள்**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுலை 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுலை 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் ஜுலை 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் ஜுலை 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.5 | இந்நகராட்சியில் கடந்த 03/2012 முதல் 04/2015ம் ஆண்டில் சுய உதவிக்குழுக்கள் மூலம் துப்புரவுப்பணிகளை செய்தது தொடர்பாக, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்திலிருந்து தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி செலுத்தக் கோரியதில், காலங்கடந்த பணிகளுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி செலுத்த இயலாது என தெரிவிக்கப்பட்டது.<br>அதனைத் தொடர்ந்து இந்நகராட்சி ஆணையாளர் பெயரில் பாரத மாநில வங்கியில் இருந்த கணக்கிலிருந்து ரூ.2300084/—ஐ முடக்கி வைத்து உத்தரவிப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இந்நகராட்சியினால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு W.P.(MD) No.14245 of 2016 மற்றும் W.P.(MD) No.14246 of 2016 வழியாக, மதுரை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலத்திற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. ரூ.23000084/—ஐ முடக்கப்பட்ட செயல்பாட்டில் தடையாணை பெறப்பட்டுள்ளது.<br>மேற்காணும் வழக்குகளுக்கு நகராட்சியின் சார்பில் ஆஜராகியுள்ள திரு.எம்.கண்ணன், உயர்நீதிமன்ற வழக்கறிருக்கு வழக்கு ஒன்றிக்கு ரூ.12000/— வீதம் இரு வழக்குகளுக்கு ரூ.24000/—ஐ, வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் அனுமதிக்கலாம் |

| | |
|---|---|
| பொருள்.6 | இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் துப்புரவுப் பணியாளர்களாக பணிபுரிந்து வரும், பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் இறந்த துப்புரவுப் பணியாளர்களில் திரு.சி.முத்துமணி மற்றும் 21 துப்புரவுப் பணியாளர்கள், அவர்களுடைய வயது முதிர்வு ஓய்விற்குப் பிறகு, ஓய்வூதியப் பலன்கள் பெறுவது தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு W.P.(MD) No.21041 of 2017–இன் வழியாக வழக்கு தொடர்ந்துள்ளனர்.<br><br>இவ்வழக்கில் நகராட்சியின் சார்பாக ஆஜராகி வாதாடி வரும் திரு.எம்.கண்ணன், உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிருக்கு வழக்குக் கட்டணம் ரூ.12000/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.7 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சலை தடுக்கும் பணிகளை மேற்கொள்ள பணியமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கும், அம்மா உணவகத்தில் பணிபுரிந்து வரும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி செலுத்தக் கோரி, மதுரை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்திலிருந்து கடிதம் வரப்பெற்றதில், பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு டெங்கு மஸ்தூர் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டதினாலும், அம்மா உணவகம் ஏழை மக்களுக்கு உணவு குறைந்த விலையில் வழங்குவதற்காக பொதுமக்களின் சேவைக்காக செயல்பட்டு வருவதாலும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி தொகையினை செலுத்த இயலாது என தெரிவிக்கப்பட்டது.<br><br>அதனைத் தொடர்ந்து, மதுரை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்திலிருந்து, காரணம் கோரும் இரண்டு அறிவிப்புகள் (Show Cause Notice) பெறப்பட்டதில், மேற்காணும் டெங்கு மஸ்தூர் பணியாளர்களுக்கும், அம்மா உணவகப் பணியாளர்களுக்கும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி செலுத்தவில்லை எனில், சம்மந்தப்பட்டவர்கள் மீது தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சட்டம் 1952–ன்படி குற்றவியல் நடவடிக்கை எடுக்க நேரிடும் என தெரிவிக்கபட்டதைத் தொடர்ந்து, மதுரை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தின் இவ்விரண்டு காரணம் கோரும் அறிவிப்புகளுக்கு எதிராக, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) No.14121 of 2019 வழக்கு தொடரப்பட்டு, தடையாணையும் பெறப்பட்டுள்ளது.<br><br>இவ்வழக்கில் நகராட்சியின் சார்பாக ஆஜராகி வாதாடி வரும் திரு.எம்.கண்ணன், உயர்நீதிமன்ற வழக்கறிருக்கு வழக்குக் கட்டணம் ரூ.12000/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.8 | இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்து கடந்த 08.12.2013 அன்று பணியிடைக்காலமான திரு.ஆர்.சண்முகராஜன், மனைவி திருமதி.ச.லெட்சுமி என்பவர் குடும்ப ஓய்வூதியம் கோரி, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு W.P.(MD) No.8837 of 2015 – இன் வழியாக வழக்கு தொடர்ந்து, கடந்த 17.12.2018–இல் தீர்ப்பு பெறப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட வழக்கில் நகராட்சியின் சார்பாக ஆஜராகி வாதாடிய திரு.எம்.கண்ணன், உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கறிருக்கு வழக்குக் கட்டணம் ரூ.12000/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| | அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.9 | இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து 30.04.2016 இல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்ற திரு.ஆர்.முனியாண்டி, துப்புரவுப் பணியாளரால் ஓய்வூதியம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு W.P.(MD) No.13417 of 2017 இன் நாள்.12.03.2019ல் தீர்ப்பு வழங்கப்பட்டு வழக்கு முடித்து வைக்கப்பட்டுள்ளது.<br>தற்சமயம் மீண்டும் ஓய்வூதியம் வழங்க வேண்டி, முதல் பிரதிவாதியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களையும், 2ம் பிரதிவாதியாக இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை சென்னை மற்றும் நகராட்சி ஆணையாளரை 3ம் பிரதிவாதியாகவும் சேர்க்கப்பட்டு, W.P.(MD) No.13207 of 2019 ன் வழியாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார்.<br>மேற்கண்ட இரண்டு வழக்குகளுக்கும், நகராட்சியின் சார்பாக ஆஜராகி உள்ள திரு.எம்.கண்ணன், உயர்நீதிமன்ற வழக்கறிஞருக்கு வழக்கு ஒன்றிற்கு ரூ.12000/– வீதம் இரு வழக்குகளுக்கு ரூ.24,000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.10 | நகர்மன்ற தீர்மான எண். நாள்.28.06.2019ன்படி இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான தளவாட சாமான்களை கொள்முதல் செய்வதற்கு சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 16.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. |

| வ. எண் | விநியோகம் செய்யவேண்டிய பொருட்களின் விபரம் | ஸ்டார் ஏஜேன்ஸிஸ், தொண்டி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ரூ. | எம்.என்.டிரேடர், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ரூ. |
|---|---|---|---|
| 1 | தெரு கூட்டும் மாறு பிடியுடன் | 400 | 405 |
| 2 | மண்வெட்டி | 708 | 715 |
| 3 | கடப்பாறை | 885 | 890 |
| 4 | வாருகால் கரண்டி | 440 | 445 |
| 5 | குப்பை அள்ளும் கொக்கி | 537 | 547 |
| 6 | அரிவாள் | 700 | 710 |
| 7 | சம்மட்டி | 660 | 675 |
| 8 | தகரக்கூடை | 357 | 377 |
| 9 | தகரக்கையோடு | 80 | 90 |
| 10 | தெருக்கூட்டும் பிரஸ் பிடியுடன் | 300 | 305 |
| 11 | வாங்கருவாள் பிடியுடன் | 500 | 510 |
| 12 | இரும்பு வாளி | 177 | 182 |
| 13 | தென்னங்கூட்டுமாறு | 20 | 25 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு தளவாடச் சாமான்கள் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஸ்டார் ஏஜேன்ஸிஸ், தொண்டி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு –

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. குறைந்த தொகைக்கு தளவாடச் சாமான்கள் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஸ்டார் ஏஜென்ஸிஸ், தொண்டி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1976/2018/எச்2

**பொருள்.11**

நகர்மன்ற தீர்மான எண். நாள்.28.06.2019ன்படி இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான கிருமி நாசினிகளை கொள்முதல் செய்வதற்கு சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 16.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | விநியோகம் செய்ய வேண்டிய கிருமி நாசினிகள் | ஜி. வி. ஏஜென்ஸிஸ், மதுரை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ரூ. | விகாஸ் ஏஜென்ஸிஸ், மதுரை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ரூ. |
|---|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்புத் தூள் | 7.65 | 7.75 |
| 2 | பிளீச்சிங் பவுடர் | 48 | 49 |
| 3 | பினாயில் | 48 | 50 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு கிருமி நாசினிகள் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஜி.வி. ஏஜென்ஸிஸ், மதுரை என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு –

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. குறைந்த தொகைக்கு கிருமி நாசினிகள் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஜி.வி.ஏஜென்ஸிஸ், மதுரை என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2671/2017/எச்2

**பொருள்.12**

நகர் மன்ற தீர்மான எண் நாள் 6.19ன்படி இந்நகராட்சியில் பொது சுகாதார வாகனம் TN 65-8406 C (டிராக்டர்) 2019 –2020 வருடாந்திர தகுதிசான்று பெறுவதற்கான பழுதுப்பணிகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 16.7.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்கப்புள்ளிகள் வரப்பட்டன.

| வ. எண் | பழுதுப்பணிகள் விபரம் | பாபு ஆட்டோ மொபைல்ஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தின்ஒப்பந்த புள்ளி | தீபா எண்டர்பிரை நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி |
|---|---|---|---|
| 1 | பொது சுகாதார வாகனம் TN65 –8406 டிராக்டர் பழுதுப்பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ . 84450/– | ரூ. 89900/– |

| | |
|---|---|
| | வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த தொகைக்கு பழுதுப்பணிகள்மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கிய பாபு ஆட்டோ மொபைல்ஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலகக் குறிப்பு–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2.குறைந்த தொகைக்கு ஒப்பந்தபுள்ளி வழங்கிய பாபு ஆட்டோ மொபைல்ஸ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.13 | தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன்படி நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு பொறியாளராக பதிவு செய்ய கீழ்காணும் நபர்கள் விண்ணப்பம் செய்துள்ளார்கள்.<br>1) திரு.எம்.முத்தையா 2) திரு.ஏ.முகம்மது தமீம் அன்சாரி 3) திரு.எம்.தங்கவேலு<br>மேற்காணும் மூன்று நபர்களுக்கு பரமக்குடி நகராட்சி பகுதியில் பதிவு பெற்ற பொறியாளர் சான்று வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>அலுவலகக் குறிப்பு–<br>மனுதாரர் உரிய கட்டணம் ரூ.5000/– கணினி வாயிலாக செலுத்தி உள்ள்தால், மேற்காணும் கட்டிட விதிகளின்படி ஐந்து வருட காலத்திற்கு 31.03.2024 வரை பதிவு செய்து வழங்கலாம். ஒவ்வொரு ஆண்டு புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமத்தினை புதுப்பித்தல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.851/2019/எப்2) |
| பொருள்.14 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு–பி, பிளாக்–2, நகரபுல எண். 5/38ல் 1346 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் மனைப்பிரிவின் அரசாணை எண்.138 வீ.வ (ம) ந.பு.வ.துறை நாள்.04.06.2004 மற்றும் நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர், சிவகங்கை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1129/2019/சிம2 நாள்.21.06.2019ன்படி மனைப்பிரிவு வரைபடத்தின்படி ஒதுக்கீடு டுசெய்யப்பட்ட சாலையினை தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. ( தானப் பத்திர எண்ண்2032/2019 நாள்.22.05.2019) நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வடிகால் வசதி மற்றும் தெருவிளக்கு அமைக்க உத்தேச தொகை ரூ.55961 சலான் எண்.2520 நாள்.12,07,2019ல் செலுத்தப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தும் அரசாணையின்படியும், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களின் கொள்கை அளவிலான உத்திரவு படி உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வடிகால் மற்றும் தெருவிளக்கு அமைக்க உத்தேச தொகையும் செலுத்தியதற்கும், தானப் பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்துள்ளதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.554/2019/எப்2) |
| பொருள்.15 | நகர் மன்ற தீர்மான எண். நாள்.28.06.2019ன் ப டி இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு 5 எண்ணிக்கையிலான எடை இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கு சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 16.07.2019 அன்று ஒப்பந்த புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றன. |

| வ. எண் | வினியோகம் செய்ய வேண்டிய பொருட்களின் விபரம் | ஜி.வி. ஏஜென்ஸிஸ்,மதுரை என்ற நிறுவனத்தின் ஒப்பந்த புள்ளி | விகாஸ் ஏஜென்ஸிஸ்,மது என்ற நிறுவனத்தி ஒப்பந்த புள்ளி |
|---|---|---|---|
| 1 | எடைபோடும் இயந்திரம்– 5NOS | ரூ. 11975/– | ரூ. 12250 |

| | |
|---|---|
| | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த தொகைக்கு எடை இயந்திரங்கள் வினியோகம் செய்ய ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஜி.வி.ஏஜென்ஸிஸ், மதுரை என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு –<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குறைந்த தொகைக்கு எடை போடும் இயந்திரங்கள் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஜி.வி.ஏஜேன்ஸிஸ், மதுரை என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்1109/2019/எச்2 |
| பொருள்.16 | இந்நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அறையில் குளிர்சாதனப் பெட்டி புதிதாக பொருத்தவும், புதிய கட்டிடத்தில் பொறியியில் பிரிவு எழுத்தர் மற்றும் குடிநீர் பிரிவு எழுத்தருக்கு இருக்கை வசதிகள் செய்ய நகர்மன்றத் தீர்மான எண். நாள். 06,2019ல் 1,05 லட்சம் செலவு செய்ய அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 21.06.19ந் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது, மன்றத்தின் ஒப்புதலுக்கு<br><br>1) திரு.பி.சசிவர்ணம், ஒப்பந்ததாரர் 0.047% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு<br>2) திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் 2.97% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மேன்றடி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பி.சசிவர்ணம், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் 0.047% குறைவாக இருப்பதால் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.17 | இந்நகராட்சி அலுவலக கணினி அறையில் இயங்கி வரும் UPS மற்றும் அதற்கான பேட்டரிகள் அனைத்தும் பழுதடைந்து உள்ளதால், மின்சாரம் துண்டிப்பு ஆகும் நேரங்களில் கணினியில் தொடர்ந்து பணிகள் பார்க்க இயலவில்லை. மேலும் திடீரென மின் துண்டிப்பு செய்யப்படுவதால், கணினிகள் பழுதுதாகும் சுழ்நிலையும் உள்ளது. எனவே, கணினி அறையில் உள்ள UPS மற்றும் பேட்டரிகள் மாற்ற உத்தேச செலவினம் ரூ.2,00,000/– மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.18 | இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் டி.என்.65 டபிள்யு –8911ல் ஹைட்ராலிக் ஜாயின்டு ஸ்டீல் கட் தேய்ந்து உள்ளதாலும், ஹோஸ் பழுதடைந்து உள்ளதால் ஹைட்ராலிக் லேடர் இயக்க முடியவில்லை. எனவே, மேற்படி பழுதுப்பணியை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.8800/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும், தெருவிளக்கு பராமரிப்பு பணி அத்தியாவசியம் கருதி உள்ளூர் நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று கீழ்கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br>1) N.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், மதுரை–மண்டபம் ரோடு , பரமக்குடி – ரூ.8800/–<br>2) செந்தில் மோட்டார் ஒர்க்ஸ், அண்ணா நகர், பரமக்குடி – ரூ.9300/– |

| | |
|---|---|
| | மேற்படி பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ரேட் கொடுத்துள்ள N.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்கவும், அந்நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும், மேலும் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கி பணி செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.19 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள இலவச கழிப்பறையில் மராமத்து பணிகள் மற்றும் கூடுதல் மின் விளக்கு வசதி அமைக்குமாறு போக்குவரத்து ஆய்வாளர் அவர்கள் நேரரிடையாக பேருந்து நிலைய புதுப்பித்தலின் போது ஆய்வு செய்து அறிவுறுத்தியதன் பேரில் மேற்படி பேருந்து நிலைய இலவச கழிப்பறை மராமத்து பணிகள் மற்றும் கூடுதல் மின் விளக்கு வசதிகள் செய்ய தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>மனறம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.20 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள எமனேஸ்வரம் நகராட்சி தொடக்கப்பள்ளியில் போதுமான வகுப்பறைகள் இல்லாததாலும், பள்ளியின் முன்புறம் உள்ள தளம் தாழ்வாக இருப்பதால் மழைநீர் தேங்கி பள்ளியில் சுகாதாரக் கேடு விளைவிக்க வாய்ப்புள்ளதாலும், பள்ளிக் குழந்தைகளின் நலன் கருதி மேற்படி தொடக்கப்பள்ளி வளாகத்தில் கூடுதல் வகுப்பறையும், முன்புற முகப்பில் பேவர் கல்தளம் அமைத்து பள்ளி கட்டிடத்திற்கு வர்ணம் பூசும் பணிக்கும் ரூ.9.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 21.06.2019ந் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு<br><br>1) திரு.பி.கோவிந்தன், ஒப்பந்ததாரர் — 0.05% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு<br>2) திரு.எம்.சங்கர், ஒப்பந்ததாரர் — 0.85% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்<br><br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பி.கோவிந்தன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள விலைப்புள்ளி விலை விகிதம் 0.05% குறைவாக இருப்பதால், மன்றம் எற்றுக் கொள்ளலாம். மேலும் பள்ளிக் குழந்தைகளின் நலன் கருதியும், சுகாதாரம் கருதியும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.21 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள டி.என்.65—பி—3907 குடிநீர் லாரியின் தகுதிச் சான்றிதழ் 26.07.2019ந் தேதியுடன் முடிவடைகிறது. மேற்கண்ட லாரி மீண்டும் தகுதிச் சான்றிதழ் பெறும் பொருட்டு லாரியில் உள்ள பழுதுப்பணிகள் செய்ய 05.07.19ந் தேதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது, மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.<br><br>1) M/S N.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், மதுரை—மண்டபம் ரோடு , பரமக்குடி — ரூ.40,000<br>2) M/S செந்தில் மோட்டார் ஒர்க்ஸ், அண்ணா நகர், பரமக்குடி — ரூ.40.400<br><br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்களில் M/S N.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், மதுரை—மண்டபம் ரோடு , பரமக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம். |

| | |
|---|---|
| | அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் தற்போது நகரில் கடும் வறட்சி நிலவி வருவதால் குடிநீர் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கி பணி செய்ததையும், இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர்நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.22 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28, எம்.ஜி.ஆர்.நகர் அருந்தியர் மக்கள் நல சபை, பரமக்குடி அவர்களிடமிருந்து ஸ்ரீ சோனையா கோவிலுக்கு மின் இணைப்பு பெற தடையில்லா சான்று வழங்குமாறு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மின் இணைப்பு பெறுவதற்கு தடையில்லா சான்று வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.23 | இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் 2019—20ம் ஆண்டில் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரிக்கான தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலத்திற்கு இணையதள சேவை மூலமாக பதிவு செய்ய வேண்டும். மேற்கண்ட பதிவு செய்வதற்கான செலவினத் தொகையினை சங்கமம் அசோசியட் உரிமையர் திரு.கே.ஆர்.நாகராஜன் என்பவருக்கு 2019—20ம் ஆண்டுக்கான உரிய தொகையினை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.24 | இந்நகராட்சியில் 2018—19ம் ஆண்டு கணக்கு உள்ளாட்சி நிதித்தணிக்கை கணக்குகள் முடிக்க பட்டய கணக்கர் திரு.கே.ஆர்.கே.நாகராஜன் என்பவருக்கு பொதுநிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி ஆகிய கணக்குகளை முடித்து பட்டியல் தயார் செய்து வழங்குவதற்கு சம்மந்தப்பட்ட மூன்று கணக்குகளுக்கும் ஐந்து நகல்கள் எடுப்பதற்கும் செலவுத் தொகை ரூ.35000/—யை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.25 | பரமக்குடி நகராட்சிக்குச் சொந்தமான உழவர் சந்தை பின்புறம் உள்ள காலியிடத்தில் 15 மீ X 3 மீ அளவுள்ள மேற்கூரையுடன் கூடிய ஷெட் 16 கடைகளுக்கு மாத வாடகை ரூ.(6108X16) ரூ.97693/—ம் மற்றும் 22.50X5,00 mm, 28,00X5.00 m அளவுள்ள மேற்கூரையுடன் கூடிய ஷெட் 17 எண்ணம் கடைகளுக்கு மாத வாடகை தொகை (ரூ.10955 X 17) ரூ.186206/—ம் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சந்தைக்கடை தெரு பகுதியில் 10x8க்கு காலியிடத்திற்கு (மாற்று திறனாளிக்கு) மாத வாடகை ரூ.2335/— நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அம்மா உணவகம் பின்புறம் உள்ள காலியிடத்திற்கு மாதவாடகை ரூ.17647/—ம் மற்றும் தாலுகா அலுவலகம் அருகில் ஆஸ்பெட்டாஸ் ஷெட் கடைக்கு மாத வாடகை ரூ.13103/—ம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இனங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகைத் தொகையினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் மற்றும் மேற்கண்ட இனங்களை நடைமுறைக்கு கொண்டு வர பொது ஏலம் நடத்துவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| | அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.26 | இந்நகராட்சிக்குட்பட்ட உழவர் சந்தை பின்புறம் அமைந்துள்ள புதிய திறந்த வெளிக்கடை 17 எண்ணம் மற்றும் பழைய திறந்தவெளிக்கடை 16 எண்ணம் கடைகளுக்கு 24.07.2019ம் தேதி மாத வாடகை அடிப்படையில் கடை ஒன்றிற்கு முன் வைப்புத் தொகை ரூ.100000/–ம் வீதம், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பொது ஏலத்திலும், ஒப்பந்தப்புள்ளியிலும் எவரும் கலந்து கொள்ள முன் வராததினால் மேற்கண்ட புதிய கட்டிடம் 17 கடைகளுக்கும் தனித்தனியாக இல்லாததினாலும், ஒரே கட்டிடமாகவும் மற்றும் பழைய கட்டிடம் 16 கடைகளும் ஒரே கட்டிடமாக உள்ளதால், புதிய திறந்தவெளிக் கடை 17 எண்ணங்களுக்கும், முன் வைப்புத் தொகை ரூ.200000/–ம் மற்றும் பழைய திறந்தவெளி 16 கடைகளுக்கும் ரூ.2,00,000/–ம் முன் வைப்புத் தொகையாக மாற்றி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி.

## மன்றப் பொருள்

இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் 2019–20ம் ஆண்டில் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரிக்கான தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலத்திற்கு இணையதள சேவை மூலமாக பதிவு செய்ய வேண்டும். மேற்கண்ட பதிவு செய்வதற்கான செலவினத் தொகையினை சங்கமம் அசோசியட் உரிமையர் திரு.கே.ஆர்.நாகராஜன் என்பவருக்கு 2019–20ம் ஆண்டுக்கான உரிய தொகையினை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கணக்கர் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்

**மன்றப்பொருள்**

இந்நகராட்சியில் 2018–19ம் ஆண்டு கணக்கு உள்ளாட்சி நிதித்தணிக்கை கணக்குகள் முடிக்க பட்டய கணக்கர் திரு.ஜே.ராஜேஸ் கண்ணா என்பவருக்கு பொதுநிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி ஆகிய கணக்குகளை முடித்து பட்டியல் தயார் செய்து வழங்குவதற்கு சம்மந்தப்பட்ட மூன்று கணக்குகளுக்கும் ஐந்து நகல்கள் எடுப்பதற்கும் செலவுத் தொகை ரூ.35000/–யை வழங்கவும் மற்றும் இதர செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கணக்கர் | தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்